கடும் மழையால் வெட்டவெளிச்சம் :

தமிழ்நாடு மின்வாரியத்தின் மோசமான பராமரிப்பு பணிகள்!

'தி டைம்ஸ் ஆப் இந்தியா' ஆங்கில நாளேடு குற்றச்சாட்டு!

சென்னை, அக். 22 -

வடகிழக்குப் பருவமழையின் முதல் கனமழையானது, தமிழ்நாடு மின்சார விநியோகக் கழகத்தின் (TNPDCL) பராமரிப்புப் பணிகளை அம்பலப்படுத்தியுள்ளது என்று தி டைம்ஸ் ஆப் இந்தியா ஆங்கில நாளேடு தெரிவித்துள்ளது.

சனிக்கிழமை இரவு முதல் பல பகுதிகளில் மின்வெட்டு ஏற்பட்டது. நகரின் பரபரப்பான வர்த்தக மையங்களில் ஒன்றான கோயம்பேடு மொத்த விற்பனைச் சந்தைக்கு, ஞாயிற்றுக்கிழமை மாலை வரை மின்சாரம் மீண்டும் வழங்கப்படவில்லை.

ஆயுத பூஜை கொண்டாட்டங்களுக்கு முன்னதாக, சனிக்கிழமை இரவு சுமார் 10 மணியளவில் பழச் சந்தைக்கான மின் விநியோகம் நிறுத்தப்பட்டதால் வியாபாரம் பாதிக்கப்பட்டது. பல கடைகளில் பேட்டரி பேக்கப் தீர்ந்து போனதால், பழங்களைச் சேமிப்பதும், விளக்குகள் அமைப்பதும் சிக்கலாகியது," என்று சென்னை கோயம்பேடு பழங்கள் கமிஷன் முகவர்கள் சங்கத்தின் தலைவர் எஸ். சீனிவாசன் கூறினார். பழச் சந்தையில் மட்டும் சுமார் 600 கடைகள் உள்ளன. மின் தடைக்குக் காரணமான சேதமடைந்த நிலத்தடி கேபிள் சரிசெய்யப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.


இருப்பினும், சில நாட்களுக்கு முன்பு சந்தைக்கு சுமார் 11 மணி நேரம் மின் விநியோகம் நிறுத்தப்பட்டதாக வியாபாரிகள் புகார் தெரிவித்தனர். "சந்தை முதலில் அமைக்கப்பட்டபோதே நிலத்தடி கேபிள்கள் பதிக்கப்பட்டன, அவற்றை மாற்ற வேண்டும். ஆனால், செலவை யார் ஏற்பது என்பது குறித்து சென்னை பெருநகர அபிவிருத்தி ஆணையத்திற்கும் (CMDA) தமிழ்நாடு பொதுத்துறை நிறுவனத்திற்கும் (TNPDCL) இடையே வாக்குவாதம் நடந்து வருகிறது," என்று மற்றொரு வியாபாரி கூறினார். சந்தை வளாகத்தின் தலைமை நிர்வாக அதிகாரி இந்துமதியிடம் கருத்து

நிலத்தடி மின் கேபிளில் ஏற்பட்ட கோளாறு காரணமாக புளியந்தோப்புப் பகுதி மக்கள் ஞாயிற்றுக்கிழமை நாள் முழுவதும் மின்வெட்டைச் சந்தித்தனர். அதே சமயம், கோபாலபுரத்தில் மின்மாற்றியில் ஏற்பட்ட தீ விபத்தால் மின் தடை ஏற்பட்டது.டி. நகர் மற்றும் மாம்பலத்தில், மூன்று வெவ்வேறு கோளாறுகள் காரணமாக வீடுகளும் வணிக வளாகங்களும் இருளில் மூழ்கின. சனிக்கிழமை இரவு பெய்த கனமழையைக் காரணம் காட்டி, அண்ணா சாலைப் பகுதிக்கு டி.என்.பி.டி.சி.எல் மின் விநியோகத்தை நிறுத்தியது.

இதற்கிடையில், பல்வேறு பகுதிகளில் மேல்நிலை மின்கம்பிகள் அபாயகரமாகத் தாழ்வாகத் தொங்குவதாகவும், நிலத்தடி மின்கம்பிகளிலிருந்து புகை வருவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். திருவேற்காட்டில், ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மேல் நிலை மின்கம்பிகள் மீது மரங்கள் விழுந்ததால் மின்வெட்டு ஏற்பட்டது. காலை 7.30 மணியளவில் மின் விநியோகம் மீண்டும் தொடங்கப்பட்டதாக தமிழ்நாடு மின்வாரிய மின்வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

சனிக்கிழமை மாலை கனமழை தொடங்கியதை அடுத்து, மாதவரம் மற்றும் எண்ணூர் பகுதிகளில்தான் முதலில் மின்வெட்டு ஏற்பட்டது; ஞாயிற்றுக்கிழமை காலை மின் விநியோகம் மீண்டும் வழங்கப்பட்டது. ஞாயிற்றுக்கிழமையும் மின்வெட்டு தொடர்ந்ததால், நீலாங்கரை, புளியந்தோப்பு, மாங்காடு, திருவொற்றியூர், * திருவேற்காடு மற்றும் கொட்டிவாக்கம் உள்ளிட்ட பல பகுதிகள் பாதிக்கப்பட்டன.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.


Extended power cuts in city expose poor upkeep by TNPDCL

TIMES NEWS NETWORK

Chennai: The first heavy downpour of the northeast monsoon exposed poor maintenance work by Tamil Nadu Power Distribution Corporation (TNPDCL), as several areas across the city reported power cuts since Saturday night, some extending into Sunday.

Supply to Koyambedu wholesale market was not restored until Sunday evening, affecting business ahead of Ayudha Puja celebrations. "The underground power cables were laid when the market was set up and should be replaced. Chennai Metropolitan Development Authority and TNPDCL have been sparring over

உடல்நிலை பாதிக்கப்பட்ட துறைமுகம் கிழக்குப் பகுதிச்செயலாளர் முரளியை

விசாரணை என்ற பெயரில் அலைக்கழிக்கும் காவல்துறை!

மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. கண்டனம்!

சென்னை, அக். 22 -

இருதய நோய் காரணமாக ஆன்ஜியோ சிகிச்சை பெற்று உடல்நிலை பாதிக்கப்பட்ட துறைமுகம் கிழக்குப் பகுதிச்செயலாளர் முரளியை விசாரணை என்ற பெயரில் அலைக்கழிக்கும் காவல்துறையினருக்கு மாவட்டச் செயலாளரும் - முன்னாள்அமைச்சருமான பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. கண்டனம் தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட துறைமுகம் கிழக்குப் பகுதி செயலாளர் முரளி அவர்களை, ஆளுங்கட்சியினரின் பொய்ப் புகாரின் அடிப்படையில் விசாரணை என்ற பெயரில் காவல்துறையைப் பயன்படுத்தி அலைக்கழித்துள்ள செயலை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

கடந்த அக்டோபர் 7ஆம் தேதி பாரிமுனை ராஜா அண்ணாமலை மன்றத்தில் நடைபெற்ற முப்பெரும் விழாவில், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திருமதி. சுதா தீனதயாளன் ஆளும் த.வெ.க. அரசின் நிர்வாகச் சீர்கேடுகளைச் கண்டித்து உணர்ச்சிபூர்வமாக உரையாற்றியபோது, கழகத் துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி இராஜாத்தி கருணாநிதி எம்.பி. அவர்களும், மாவட்டச் செயலாளர் என்ற முறையில் நானும் உடனடியாகத் அதை சுட்டிக்காட்டி மேடையிலேயே அறிவுறுத்தினோம்.

ஆனால், அந்த நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளர்களில் ஒருவரான முரளி அவர்களை, விசாரணை என்ற பெயரில் காவல்துறையினர் நேற்று முன்தினம் (20.10.2026) காலை 11 மணி முதல் இரவு 7 மணி வரை காவல் நிலையத்தில் காக்க வைத்து மிரட்டியுள்ளனர். முரளி அவர்கள் இருதய நோய்க்காகத் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருபவர். கடந்த மே-26 அன்று இருதய குழாயில் ஏற்பட்ட மூன்று அடைப்பிற்காக ஆன்ஜியோ செய்து ஒரு குழாயில் ஸ்டென்ட் பொருத்தப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நிலையில், இத்தகைய உடல்நலப் பாதிப்புள்ளவரை மணிக்கணக்கில் அலைக்கழித்து, கொடுங்குற்றவாளியைப் போல நடத்தியதால் அவர் மீண்டும் உடல்நலம் குன்றி தற்போது ஸ்டான்லி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இத்தகைய நிகழ்வுகள் மிகவும் மனிதாபிமானமற்ற செயலாகும்.

137 கிலோ மெத்தம் பெட்டமைன் போதைப் பொருள் தயாரித்து, கடத்துவதற்குத் தயாராக இருந்ததாகக் கூறப்படும் வழக்கில், தமிழக வெற்றிக் கழகத்துடன் தொடர்பு டையதாகக் கூறப்படும் முன்னாள் நிர்வாகி பூபாலன் உள்ளிட்டோர் மீதான குற்றச்சாட்டுகள் குறித்து உரிய விசாரணை நடத்தி, சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டிய காவல் துறை, மக்களின் கவனத்தைத் திசைதிருப்பவே எதிர்க்கட்சிகளுக்கு எதிராகப் பயன்படுத்துகின்றனர்.

தங்களது கட்சியின் சமூக வலைதளப் பிரிவினர் (Virtual Warriors), குறிப்பாகப் பெண்கள் உள்ளிட்ட எதிர்க்கட்சித் தலைவர்களை அவதூறான, இழிவான வார்த்தைகளால் விமர்சித்து, பொய்ப் பிரச்சாரங்களை முன்னெடுப்பதைக் கண்டிக்கக்கூடத் மனமில்லாத அக்கட்சித் தலைவர், பொதுவெளியில் மேடைப் போட்டு அக்கட்சியினரின் விமர்சனங்களை சுட்டிக்காட்டி விவாதிக்க நாங்கள் தயார்.

ஜனநாயக நாட்டின் கருத்துச் சுதந்திரத்தையும், அரசியல் செயல்பாட்டுரிமையையும் அச்சுறுத்தும் இத்தகைய எதேச்சதிகாரப் போக்கை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

திராவிட முன்னேற்றக் கழகம் என்பது எதையும் தாங்கும் இதயம் கொண்ட தொண்டர்களைப் பெற்ற இயக்கம்! எத்தனை அடக்குமுறைகள் வந்தாலும், எத்தனை அச்சுறுத்தல்கள் தொடர்ந்தாலும், எங்கள் ஜனநாயகப் போராட்டம் ஓயாது! இயக்கம் காப்போம்! இனம் காப்போம்! ஜனநாயகம் காப்போம்!

இவ்வாறு மாவட்டச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



விழுப்புரம் மத்திய மாவட்டக் கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் முன்னிலையில் விழுப்புரம், கலைஞர் அறிவாலயம், தளபதி அரங்கில் தமிழக வாழ்வுரிமை கட்சியின் விழுப்புரம் நகரச் செயலாளர் மோகன் தலைமையில் 150 நபர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தார்கள். இவ்விழாவில் மாவட்டப் பொறுப்புக்குழு உறுப்பினர் இரா.கண்ணப்பன், விழுப்புரம் கிழக்கு நகர கழக பொறுப்பாளர் S.வெற்றிவேல், கோலியனூர் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் பி.தெய்வசிகாமணி, கோலியனூர் மத்திய ஒன்றிய கழக பொறுப்பாளர் K.N.B.ராஜா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நாம் தமிழர் கட்சியின் இடைத்தேர்தல் வேட்பாளர் கார்த்திகா கைது!

அரசியல் பழிவாங்கும் நடவடிக்கைக்கு கண்டனம்!

மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. அறிக்கை!

நாகை, அக். 22 -

மனித நேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தாராபுரம் சட்டமன்றத் நாம் தமிழர் கட்சியின் இடைத்தேர்தல் வேட்பாளர் கார்த்திகா கைது: அரசியல் பழிவாங்கும் நடவடிக்கைக்கு கண்டனம்.

மனிதநேய மக்கள் கட்சியின் தலைவரும் நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினருமான பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா வெளியிடும் அறிக்கை

தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் நாம் தமிழர் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்ட கார்த்திகாவையும் அவரது கணவரையும் காவல்துறையினர் கைது செய்திருப்பது அதிர்ச்சியளிக்கிறது. இந்தக் கைது நடவடிக்கையின் பின்னணி மற்றும் அதில் பின்பற்றப்பட்ட நடைமுறைகள் அனைத்தும் கடும் கண்டனத்திற்குரியவை.



ஜனநாயகத்தில் அரசியல் கட்சிகள் தேர்தலில் போட்டியிடுவதற்கும், தங்களது கருத்துகளை மக்களிடம் எடுத்துரைப்பதற்கும், ஆளுங்கட்சியின் செயல்பாடுகளை விமர்சிப்பதற்கும் முழு உரிமை உண்டு. அரசியல் கருத்து வேறுபாடுகள் காரணமாக எவரும் பழிவாங்கப்படக் கூடாது. சட்டம் அனைவருக்கும் சமமாகச் செயல்படுத்தப்பட வேண்டும் என்பதே ஜனநாயகத்தின் அடிப்படை நெறியாகும்.

தாராபுரம் இடைத்தேர்தலின் போது கடந்த அக்டோபர் 2ஆம் தேதி தாராபுரத்தில் நாம் தமிழர் கட்சியின் தேர்தல் பணிமனைக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த விளம்பர பலகை அகற்றப்பட்டதைக் கண்டித்து, அக்கட்சியினர் காவல் நிலையம் முன்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனைத் தொடர்ந்து, தேர்தல் காலத்தில் வாக்காளர்களுக்குப் பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் வழங்கப்படுவதாகக் குற்றம்சாட்டிய வேட்பாளர் கார்த்திகா, தேர்தல் அலுவலரிடம் புகார் அளித்தார்.

வாக்காளர்களுக்கு பணம் கொடுத்த புகார் மீது நடவடிக்கை எடுக்காத காவல்துறை தேர்தல் பரப்புரை தொடர்பான வழக்கில் தற்போது கைது செய்திருப்பது பழிவாங்கலின் வெளிப்பாடாகவே அமைந்துள்ளது.

ஒருவர் மீது குற்றச்சாட்டு இருந்தால், உரிய விசாரணை நடத்தி, சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போது சட்டப்பூர்வ நடைமுறைகள் முழுமையாகப் பின்பற்றப்பட வேண்டும். குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படுவதற்கு முன்பே எவரும் குற்றவாளியாகச் சித்தரிக்கப்படக் கூடாது.

எனவே, கார்த்திகா மற்றும் அவரது கணவர் மீதான வழக்குகளின் விவரங்களைத் தமிழக அரசு வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும். முறையற்ற வகையில் கைதுச் செய்யப்பட்டுள்ள சகோதரி கார்த்திகாவும் அவரது கணவரும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசியல் எதிர்ப்புக் குரல்களை ஒடுக்குவது ஜனநாயகத்தின் வலிமையல்ல; அது ஜனநாயகத்தின் மாண்பைக் குலைக்கும் செயல். சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்பட வேண்டும்; அரசியல் பழிவாங்கலுக்கு இடமளிக்கக் கூடாது!

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



வலைதளங்களில் வலம் வருவது!



முதல்வருக்கு உளவுத்துறை சொன்ன தகவல்..!

தமிழகத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்த பல மாவட்டச் செயலாளர்கள், கட்சி நிர்வாகிகளின் பின்னணி குறித்து ஆராயாமல் பொறுப்புகளை வழங்கியிருக்கிறார்கள். இதனால் திருவள்ளூர் உள்ளிட்ட பல பகுதிகளில், நாகையில் நடந்ததைப் போன்ற பல விஷயங்கள் வெளிவர வாய்ப்பிருப்பதாகவும், இப்போதே முதல்வர் கவனம் செலுத்தவில்லை என்றால் மிகப் பெரிய பின்விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்றும் எச்சரிக்கை விடுத்திருக்கிறதாம். பல மாவட்டச் செயலாளர்களின் பதவி பறிபோனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்கிறார்கள்.

TNNEWS24-ல் உங்கள் செய்திகள் மற்றும் நிகழ்ச்சிகள் இடம்பெற
tnnews24air.com -9150449265 Tnnews24Digital

சேலத்தில் த.வெ.க. ஆட்சியில் வீதிக்கு வீதி போதை மாத்திரை விற்பனை!

சேலம், அக். 22 -

சேலம் மாவட்டத்தில் அரசால் தடை செய்யப்பட்ட போதை மாத்திரைகள் வீதிக்கு வீதி விற்பனை சமீப காலமாக த.வெ.க. ஆட்சியில் அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில் கன்னங்குறிச்சி போலீசார் எழில் நகர் பகுதியில் சென்ற போது சந்தேகத்திற்கு இடமாக நின்று கொண்டிருந்த வாலிபரை சோதனை செய்ததில் அவரிடம் மாத்திரைகள் இருந்ததை கண்டு பிடித்தனர்.

அந்த மாத்திரைகளை சோதனை செய்ததில் இதை போதைக்காக பயன்படுத்தும் மாத்திரைகள் என்று தெரிய வந்தது இவரிடம் 60 போதை மாத்திரைகள் இருந்ததை பறிமுதல் செய்தனர். இந்த போதை மாத்திரைகளை வைத்திருந்த கிச்சிப் பாளையம் பகுதியைச் சேர்ந்த அருணாசலத்தை கைது செய்து அவரிடம் இவருக்கு போதை மாத்திரையை விற்பனைக்கு கொடுத்தவர் யார்? என்று விசாரணை செய்து வருகிறார்கள்.